அகில இலங்கை சித்த வைத்திய சங்க செயலாளர்
வைத்திய கலாநிதி

**ஆ. குணரத்தினம் அவர்கள்**

வழங்கிய

# அணிந்துரை

குலசேகர அரசபரம்பரையில் தோன்றிய பிரபு தண்டிகைகுலசேகரம்பிள்ளை அவர்கள் தலைசிறந்த பண்டிதராவார். பரராசசேகரசக்கரவர்த்தியின் கொள்ளுப் பேரனாகிய சுழிபுரம் கதிர்காம சேகரமுதலி மகளை இவர் திருமணம் (ஏறத்தாழ கி.பி.1530ல்) செய்து தோன்றிய சந்ததியே பெரியபரிகாரியாரின் வைத்திய பரம்பரையினராவார், குலசேகர,இராசசேகர, மகாராசக்களின் பெயர்களையே ஒவ்வொரு தலைமுறையிலும் தத்தம் பிள்ளைகளுக்கு தொடர்ந்து வைத்து வருகிறார்கள். இவர்களுடைய சந்ததியில் பல வைத்திய மேதைகள் இராசசேகரம் (பிள்ளை) என்ற பெயருடன் வாழ்ந்துள்ளார்கள். எங்கள் சங்கத்தில் பல வருடங்களாக உபதலைவராக கடமை ஆற்றி சமீபத்தில் இறைவனடி சேர்ந்த வைத்திய மேதை சு. இராசசேகரம் **J.P**. காரை நகரின் ஒளி விளக்காகத் திகழ்ந்தவர். இவர்களின் ஞாபகார்த்தமாக ''இராசசேகரம்'' என்ற நூலை பெரிய பரிகாரியார் ஞாபகார்த்த சித்த வைத்திய சங்கத்தினர் வெளியிடுவதை பெருமகிழ்ச்சியுடன் வரவேற்பதுடன் வாழ்த்தி, இந்நூல் பொதுமக்களுக்கும், வைத்தியர்களுக்கும் பெரும் உதவியாக பயன்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

'' இராசசேகரன் வைத்திய பரம்பரை பல்லாண்டு சீரும் சிறப்புடனும் வாழ்க, வளர்க என வாழ்த்துகிறோம்.''

வைத்திய சிரோமணிகளே! தமிழ்ப் பெருங்குடி மக்களே!!

உங்களுடைய நன்மைக்காகவும், சுபிட்சத்திற்காகவும், கடந்த 23 தலைமுறைகளாக பாவிக்கப்பட்டதும், குணம் செயல் நிரூபிக்கப்பட்டதும் தீங்கற்றதுமான அநுபவ குடிநீர் வகைகளை எல்லோரினது தேவைக்காகவும் வெளியிடுகிறோம். ஆதியில் தண்டிகை குலசேகரம்பிள்ளையாலும் தண்டிகை குலசேகர முதலியாராலும் தண்டிகை சத்துகுலசேகர முதலியாராலும் பெரிய பரிகாரியார் வை. ஆறுமுகப்பிள்ளையாலும், வைத்திய சிரோமணி டாக்டர் ரீ. பூலோகசுந்தரம் L.I.M., முன்னாள் விரிவுரையாளர், இலங்கா ஆயுர்வேத வைத்திய கல்லூரி; முன்னாள் விரிவுரையாளர் , அரசினர் சுதேச வைத்திய கல்லூரி; முன்னாள் அங்கத்தவர், சுதேச வைத்திய அதிகார சபை, வட இலங்கை சுதேச வைத்திய சபை, வைத்திய கலாநிதி க. பாலசுப்பிரமணியம் ஆராய்ச்சியிலும் (20 வரு) கையாளப்பட்டும் அநுபவத்தில் கைகண்டதுமாகும். தற்பொழுதும் எங்களில் பலராலும் பாவிக்கப்பட்டு வருவதுமாகும். வைத்தியமாணவர்களும், வைத்தியபதிவுக்காக காத்திருப்போரும் பொதுமக்களும், வைத்தியர்களும் பாவித்துப் பயன்பெற பறாளை விநாயகர் அருள்புரிபவராக. அனுபவமான குடிநீர் வகைகள் அத்துடன் சேர்த்துக் கொடுக்கக்கூடிய மருந்துகள் விபரமாக வெளியிடப்பட்டுள்ளது.

வைத்திய கலாநிதி
தண்டிகை குலசேகரம்பிள்ளை
(பூ. கயிலாயநாதன்)
பொருளாளர், பெரியபரிகாரியார் ஞாபகார்த்த
சித்த வைத்திய சங்கம்

4.7.1984

## பதிப்புரை
## இரண்டாவது பதிப்பு

உலகம் எங்ஙனும் தற்பொழுது மூலிகை மருத்துவம் பற்றியே பேசிக் கொள்கிறார்கள். மேனாட்டு விஞ்ஞானிகள் இன்று மூலிகைகளின் மகத்தான சக்தியைப்பற்றியும், தீயவிளைவுகளற்ற தன்மையையும், தமது பல வருட ஆராய்ச்சிகளினால் நிரூபித்து வருகிறார்கள். இதனால் மேலைத்தேசத்தவர் தமது மருத்துவ தேவைகளுக்காக மூலிகை மருத்துவத்தில் பெருமளவு நாட்டம் கொண்டுள்ளனர் என்பதை உலக சுகாதார நிறுவன அறிக்கை தெரிவிக்கின்றது. எமது முன்னோராகிய தமிழ்ச்சித்தர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகின் பல பாகங்களிலும் காணப்பட்ட மூலிகைகளை ஆய்வுசெய்து அவற்றின் சுவை, குணம், வீரியம், செயல், மருத்துவ பயன்பாடுகள் பற்றி தெரிவித்துள்ளார்கள் என்றால் விஞ்ஞானத்தில் அவர்கள் அடைந்திருந்த வளர்சியையும், ஆய்வு முறைகளின் நுட்பத்தையும் எண்ணி வியப்படைய வேண்டியுள்ளது. நமக்கு சிவனால் அருளப்பட்ட அருஞ்செல்வங்களே மூலிகைகளாகும். அகத்தியர் முதலான சித்தர்கள் உலகின் நன்மைக்காக மூலிகை விஞ்ஞானத்தை ஆக்கி எமக்களித்தனர். மருத்துவ பரம்பரை வாயிலாக இன்றும் மூலிகைகளும் அவற்றின் பயன்பாடும் கீழைத்தேச மக்களை நோய்களினின்றும் காப்பாற்றி வருகின்றன. சுக வாழ்வே சிறந்த செல்வம். நம்மவர்கள் நல்வாழ்வு வாழ இந்நூல் பெரிதும் உதவக்கூடியது. தற்பொழுது பெற்றுக்கொள்ள முடியாமலிருப்பதால்மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இரண்டாம் பதிப்பாக மூலிகைகள் பற்றிய மேலதிக விபரங்களுடன் காரை அபிவிருத்திச்சபையின் அனுசரணையுடன் வெளிவருகிறது,ஆதரித்துப் பயன் பெறுவீர்களாக.

வைத்தியாச்சாரிணி பா. இராதாதேவி
கௌரவ செயலாளர்
பெரிய பரிகாரியார் ஞாபகார்த்த சித்த வைத்திய சங்கம்.
23.12.1999

மறு பதிப்புரை

# எல்லோரும் ஆரோக்கியமாக வாழவே "இராஜசேகரம்" நூல்

உலகிலே மனிதன் தோன்றிய காலம் தொட்டுச் சித்த மருத்துவம் நிலவி வந்துள்ளது. கற்காலம், செம்புக் காலம் ஆகியவற்றைத் தாண்டி மனிதன் முன்னேறிக் கொண்டு வருகையில் உலகியல் விடயங்களில் மட்டுமன்றி சித்த மருத்துவத்துறையிலும் அவன் ஈடுபட்டு மேலோங்கி வந்துள்ளான் என்பதை நாம் அறிவோம். இந்த வகையில் சித்த மருத்துவமுறை மனிதனின் ஆரோக்கிய வாழ்விற்கு வழி சமைத்துத் தந்தது மட்டுமன்றி சரித்திரம் படைத்துள்ளது.

சித்த வைத்திய சிரோன்மணி அமரர் இராஜசேகரம் இவ்வழித்தோன்றல் என்பதால் எமது சபையினரும் மற்றும் ஏனைய காரை மக்களும் பெருமை கொள்கிறோம். சிறு வயதிலேயே இத்துறையில் நாட்டம் கொண்ட அமரர் சு. இராஜசேகரம் பல கிடைத்தற்கரிய மருத்துவ மூலிகைகளைத் தேடி இனம் கண்டு அம்மூலிகைகளைப் பயன்படுத்தி சித்த முறைப்படி பல்வேறு ஔஷதங்களை ஆக்கிப் பரிகரித்து வந்தவர் அமரர் இராஜசேகரம் ஆவார்.

"இராஜசேகரம்" எனும் நூல் இன்று கிடைப்பது அரிதாக இருப்பதால் காரைமக்கள் சிலர் மீண்டும் வெளியிட்டு உதவுமாறு தங்களைக் கோரியுள்ளதாகவும் மேலும் எங்கள் சபை வெளியிடுவது சாலப் பொருத்தமானது என்றும் எனவே, இந்நூலை வெளியிட்டு மக்களுக்கு மீண்டும் கிடைக்க உதவுமாறு பெரிய பரிகாரியார் ஞாபகார்த்த சித்த வைத்திய சங்கச் செயலாளர் பா. இராதாதேவி அவர்கள் எங்கள் சபைக்கு 01.12.99 திகதி இடப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே அச்சங்கத்தினரால் மறுபதிப்புச் செய்யப்பட்ட "இராஜசேகரம்" என்னும் சித்த வைத்திய கைநூல் மீண்டும் அன்னாரை நினைவு கூறுமுகமாக எங்கள் சபையின் அனுசரணையுடன் இன்று (30.01.2000) வெளியிடப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொளகிறோம்.

தற்பொழுது மறுபதிப்பாக வெளியிடப்படும் இக்கைநூலானது அமரர் காரையூர் வைத்திய சிரோன்மணி சு.இராஜசேகரம் அவர்களின் சித்த மருத்துவத்துறையில் எய்திய நிபுணத்துவத்திற்கான ஓர் அழியாச் சான்றாகும்.

நா. பொன்னையா
(Diplim a in English, Diploma in Massmedia, Diplom a in Journalism)
பொதுச் செயலாளர்
காரை அபிவிருத்திச் சபை, கொழும்பு.

98, விவேகானந்த மேடு,
கொழும்பு 13.
30.01.2000

